

முதலமைச்சர் அவர்களின் சகோதரர் மு.க.முத்து அவர்கள் இயற்கை எய்தியதையொட்டி, நேற்று (19.7.2025) சென்னை, கோபாலபுரம் இல்லத்தில் வைக்கப்பட்டுள்ள அவரது உடலுக்கு நீர்வளம் மற்றும் சட்டத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தினார்.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் முதல் பிள்ளையும், முதலமைச்சர் அவர்களின் சகோதரருமான மு.க.முத்து அவர்கள் இயற்கை எய்தியதையொட்டி, நேற்று (19.7.2025) சென்னை, கோபாலபுரம் இல்லத்தில் வைக்கப்பட்டுள்ள அவரது திருவுடலுக்கு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தினார்.

# மு.க.முத்து மறைவு! ...முதல் பக்கத் தொடர்ச்சி

தமிழ்த் திரைப்படங்களிலும் சொந்தக் குரலில் பாடி மக்கள் உள்ளங்களில் இடம் பெற்றார். உடல்நலம் குன்றி, ஈஞ்சம்பாக்கத்தில் துணைவியார் திருமதி சிவகாம சுந்தரி – புதல்வர் டாக்டர் அறிவுநிதி, மகள் தேன்மொழி – ரங்கநாதன் இணையரின் அரவணைப்பில் வாழ்ந்து வந்தவர், நேற்று (19.7.2025) காலை 8.00 மணியளவில் இயற்கை எய்தினார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தம் அண்ணன் மு.க.முத்து அவர்கள் மறைந்த செய்தி அறிந்ததும் மிகுந்த துயரம் அடைந்து, உடனடியாகப் புறப்பட்டு ஈஞ்சம்பாக்கத்தில் உள்ள மு.க.முத்து அவர்களின் இல்லத்திற்குச் சென்று அவரது உடலுக்கு மலர்வளையம் வைத்து மரியாதை செலுத்தினார்.

**அமைச்சர் துரைமுருகன் உள்ளிட்ட அமைச்சர்கள் அஞ்சலி!**

கழகப் பொதுச் செயலாளர் – நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், கழக முதன்மைச் செயலாளர் – நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கே.என்.நேரு, கழகத் துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி.,

மு.க.அழகிரி, மு.க.தமிழரசு, திருமதி.செல்வி செல்வம், திருமதி. துர்கா ஸ்டாலின், திருமதி. மோகனா தமிழரசு, திருமதி. இராஜாத்தி அம்மையார், கனிமொழி கருணாநிதி எம்.பி.,

இயக்குனர் அமிர்தம், கலாநிதி மாறன், தயாநிதி மாறன் எம்.பி., சபரீசன், திருமதி. செந்தாமரை, நடிகர் விக்ரம்,

முத்தமிழறிஞர் கலைஞரின் செயலாளர் கி.இராஜமாணிக்கம் ஐ.ஏ.எஸ். (ஓய்வு), அவரது துணைவியார் திருமதி. சசிகலா இராஜமாணிக்கம், அவரது புதல்வர் இரா.அருள்செல்வன்,

அமைச்சர்கள் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், தங்கம் தென்னரசு, தா.மோ.அன்பரசன், அர.சக்கரபாணி, சா.மு.நாசர், மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு, சி.வெ.கணேசன், சிவ.வீ.மெய்யநாதன், முன்னாள் அமைச்சர் க.பொன்முடி, சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, சென்னை மாநகராட்சி மேயர் ஆர்.பிரியா, மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு மற்றும் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாவட்டச் செயலாளர்கள்,

முரசொலி பொது மேலாளர் எஸ்.இராஜசேகரன், ஆடிட்டர் டி.சிவசுப்பிரமணியன்,

**இறுதி அஞ்சலி செலுத்திய தலைவர்களின் விவரங்கள்!**

தமிழ்நாடு மாநில காங்கிரஸ் கமிட்டித் தலைவரும், சட்டமன்ற உறுப்பினருமான கு.செல்வப் பெருந்தகை, விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான தொல். திருமா வளவன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் மாநிலச் செயலாளர் கே. பாலகிருஷ்ணன், இந்திய யூனியன் முஸ்லீம் லீக் தேசியத் தலைவர் பேராசிரியர் கே.எம். காதர் மொகிதீன், மனிதநேய மக்கள் கட்சித் தலைவரும், சட்டமன்ற உறுப்பினருமான பேராசிரியர் எம்.எச். ஜவஹிருல்லா, மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழக தலைமைக் கழக செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான துரை வைகோ, இந்திய யூனியன் முஸ்லீம் லீக் பொதுச் செயலாளர் அபுபக்கர், மனிதநேய ஜனநாயக கட்சி தலைவர் தமீமுன் அன்சாரி, சட்டமன்ற உறுப்பினர்கள் அசன் மௌலானா, முகமது ஷா நவாஸ், நாடாளுமன்ற உறுப்பினர் நவாஸ் கனி, தெலுங்கானா மாநில முன்னாள் ஆளுநர் திருமதி தமிழிசை சௌந்தரராஜன், திராவிடர் கழக துணைத் தலைவர் கவிஞர் கலி. பூங்குன்றன், பொதுச் செயலாளர் வீ. அன்புராஜ், புதிய நீதிக் கட்சியின் தலைவரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான

ஏ.சி. சண்முகம், பாரதிய ஜனதா கட்சியின் மாநில துணைத் தலைவர் கரு. நாகராஜன், தமிழ்நாடு மாநில காங்கிரஸ் கமிட்டி முன்னாள் தலைவர் சு. திருநாவுக்கரசர்;

தி இந்து குழும இயக்குநர் என். ராம், தினத்தந்தி குழும இயக்குநர் பாலசுப்பிரமணியன் ஆதித்யன், நக்கீரன் கோபால், தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையத்தின் தலைவர் அருட்தந்தை ஜோ.அருண், தமிழ்நாடு பாடநூல் கழகத் தலைவர் திண்டுக்கல் ஐ. லியோனி, தமிழ்நாடு இயல் இசை நாடகமன்றத் தலைவர் வாகை சந்திரசேகர், கராத்தே தியாகராஜன், கவிப்பேரரசு வைரமுத்து, நடிகர் சத்யராஜ், நடிகர் எஸ்.வி. சேகர், ரேலா மருத்துவமனை இயக்குநர் டாக்டர் முகமது ரேலா, எழுத்தாளர் மனுஷ்யபுத்திரன், நல்லி குப்புசாமி;

மேலும், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், காவல்துறை தலைமை இயக்குநர் சங்கர் ஜிவால், முதலமைச்சரின் செயலாளர்கள், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் கூடுதல் தலைமைச் செயலாளர் / தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன், சிறப்பு திட்ட செயலாக்கத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர்

பிரதீப் யாதவ், உள்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் தீரஜ்குமார், நிதித்துறை முதன்மைச் செயலாளர் த.உதயச்சந்திரன், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை செயலாளர் மரு.ஆர்.செல்வராஜ், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர் அஞ்சலி செலுத்தினார்கள்.

முன்னாள் முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் மற்றும் முன்னாள் ஒன்றிய அமைச்சர் ஜி.கே.வாசன் ஆகியோர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை தொலைபேசி வாயிலாக தொடர்பு கொண்டு மு.க.முத்து அவர்களின் மறைவிற்கு தங்களது இரங்கலை தெரிவித்துக் கொண்டனர்.

**பெசன்ட்நகர் மயானத்தில் இறுதிச் சடங்குகள்!**

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் கோபாலபுரம் இல்லத்தில் பொது மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்த மு.க.முத்து அவர்களின் திருவுடல் நேற்று மாலை 4.30 மணியளவில் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு மாலை 5 மணியளவில் பெசன்ட் நகர் மின் மயானத்தில் இறுதிச் சடங்குகள் நடைபெற்றன.

இறுதி ஊர்வலத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் மற்றும் அமைச்சர் பெருமக்கள், கழக முன்னணியினர், திரையுலகினர் மற்றும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் குடும்ப உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள், உடன்பிறப்புகள் கலந்து கொண்டு இறுதி அஞ்சலி செலுத்தினர்.

மு.க.முத்து அவர்களின் மறைவால் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் தொண்டர்களும், கழக நிர்வாகிகளும் மிகுந்த வேதனை அடைந்துள்ளார்கள்.



முதலமைச்சர் அவர்களின் சகோதரர் மு.க.முத்து அவர்கள் இயற்கை எய்தியதையொட்டி, நேற்று (19.7.2025) சென்னை, கோபாலபுரம் இல்லத்தில் வைக்கப்பட்டுள்ள அவரது உடலுக்கு விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான தொல். திருமாவளவன் அவர்கள் மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தினார்.

மு.க.முத்து மறைவு!

## தமிழ்நாட்டின் கலையுலகிலும் அரசியல் வரலாற்றிலும் தனி இடம் பதித்தவர்!

### தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் கு.செல்வப்பெருந்தகை இரங்கல்!

சென்னை, ஜூலை 20-

தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் கு.செல்வப் பெருந்தகை விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சரும், திராவிட முன்னேற்ற கழகத்தின் முன்னாள் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் மூத்த மகனும், தமிழ்நாட்டின் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சகோதரருமான மு.க. முத்து அவர்களின் மறைவுச் செய்தி அறிந்து மிகுந்த வேதனையடைந்தேன்.

மு.க. முத்து அவர்கள் தமிழ்நாட்டின் கலையுலகிலும் அரசியல் வரலாற்றிலும் தனக்கென தனி இடம் பதித்தவர். தந்தையின் அரசியல் பாரம்பரியத்தையும், சமூக அக்கறையையும் தொடர்ந்து அவர் எடுத்துச் சென்றதோடு, திரைப்படங்களின் மூலமாகவும், பொது வாழ்வின் மூலம் மக்கள் மனதில் நீங்கா இடம் பிடித்தவர். தந்தையின் தமிழ்ப் பற்றையும், அரசியல் உணர்வையும் தனது வாழ்வின் பல கட்டங்களிலும் வெளிப்படுத்தியவர் மு.க. முத்து அவர்கள். பல சிறந்த படங்களில் நடித்து புகழ் பெற்ற வர். தனித்துவமான குரலில் சிறந்த பாடல்களை பாடியுள்ளார்.

அவரது மறைவு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும், குடும்பத்தினர், உறவினர்கள், தி,மு.க. உடன்பிறப்புகள், திரையுலக நண்பர்கள் மற்றும் அனைவருக்கும் ஈடு செய்யமுடியாத பேரிழப்பாகும். மிகுந்த சோகமான இந்நேரத்தில் முதலமைச்சர் அவர்களுக்கும், குடும்பத்தினர்களுக்கும், திரையுலக நண்பர்களுக்கும் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி சார்பாக ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## திரையுலகில் முன்னணி நட்சத்திரமாகத் திகழ்ந்தவர் மு.க.முத்து!

### இந்திய கம்யூனிஸ்ட் மாநில செயலாளர் இரா.முத்தரசன் இரங்கல்!

சென்னை, ஜூலை 20 -

“திரையுலகில் முன்னணி நட்சத்திரமாகத் திகழ்ந்தவர் மு.க.முத்து” என்று அவரது மறைவு குறித்து இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மாநில செயலாளர் இரா. முத்தரசன் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

இதுகுறித்து அவர் விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு :-

முத்தமிழறிஞர் கலைஞரின் மூத்த மகன் மு.க.முத்து (77) நேற்று (19.07.2025) சென்னையில் காலமானார் என்ற செய்தி அறிந்து, அதிர்ச்சியும், வேதனையும் அடைந்தோம்.

கடந்த 1948 ஜனவரி 14 ஆம் தேதி பிறந்த மு.க.முத்து, தனது 3 வயதில் தாயை இழந்து விட்ட நிலையில், சின்ன அன்னை தயாளு அம்மையாரின் அரவணைப்பில் வளர்ந்தவர். கலைஞரின் அரசியல் பணிக்கு பக்கபலமாக திகழ்ந்தவர்.

திரையுலகில் அறிமுகமாகி முன்னணி நட்சத்திரமாக திகழ்ந்தார். அவரது இளவலும், இன்றைய முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் வளர்ச்சி கண்டு மகிழ்வும், பெருமிதமும் அடைந்தவர். சில ஆண்டுகளாக உடல்நலம் பாதிக்கப்பட்டு தொடர் சிகிச்சை பெற்று வந்தார்.

மு.க.முத்துவிற்கு, அவரது வாழ்விணையர் சிவகாமசுந்தரி, மகன் எம்.கே. எம்.அறிவுநிதி ஆகியோர் உள்ளனர்.

அன்னாரின் மறைவுக்கு இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ்நாடு மாநிலக் குழு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்வதுடன், அவரை இழந்து வாடும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உள்ளிட்ட அவரது குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்துக் கொள்கிறது.

இவ்வாறு இரா.முத்தரசன் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

## கலைத் துறையிலும், அரசியல் துறையிலும் சிறந்து விளங்கியவர் மு.க.முத்து!

### மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மாநிலச் செயலாளர் பெ.சண்முகம் இரங்கல்!

சென்னை, ஜூலை 20 -

மு.க.முத்து அவர்கள் கலைத் துறையிலும் அரசியல் துறையிலும் சிறந்து விளங்கியவர்” என்று, அவரது மறைவுக்கு இரங்கல் தெரிவித்து வெளியிட்டுள்ள செய்தியில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் பெ.சண்முகம் புகழாரம் சூட்டியுள்ளார்.

அவர் விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு :-

தமிழ்நாட்டின் முன்னாள் முதலமைச்சரும், முன்னாள் திமுக தலைவருமான மறைந்த கலைஞர் அவர்களின் மூத்த மகனும், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் மூத்த சகோதரருமான மு.க. முத்து அவர்கள் உடல் நலக் குறைவால் மறைவுற்ற செய்தி வேதனையளிக்கிறது. அவரது மறைவிற்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.

மு.க. முத்து அவர்கள் கலைத்துறையிலும், அரசியல் துறையிலும் சிறந்து விளங்கியவர். தனது இனிமையான குரலில் சிறந்த சமூக நல்லிணக்கப் பாடல்களையும் பாடியவர். சிறிது காலமாக உடல்நலம் பாதிக்கப்பட்டு வீட்டிலேயே தொடர் சிகிச்சையில் இருந்தவர் சிகிச்சை பலனின்றி மறைவுற்றுள்ளார்.

அவரது மறைவால் துயருற்றுள்ள தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கும், குடும்பத்தினர், உறவினர்கள், நண்பர்கள், திரையுலகினர் அனைவருக்கும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் தனது ஆறுதலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறது.

இவ்வாறு அவர் தமது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

மு.க.முத்து மறைவு!

## சிறந்த திரைப்பட நடிகராக கலைத்துறையில் முத்திரை பதித்தவர்!

### ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ இரங்கல்!

சென்னை, ஜூலை 20-

மு.க.முத்து அவர்கள் மறைவு குறித்து ம.தி.மு.க. பொதுச்செயலாளர்வைகோ விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு:-

முத்தமிழறிஞர் கலைஞர், தமிழிசைப் பாடகர் சிதம்பரம் ஜெயராமன் அவர்களின் சகோதரி பத்மாவதி ஆகியோரின் அன்பு மகனான மு.க.முத்து அவர்கள் 77 வயதில் உடல்நலக் குறைவால் இன்று மரணம் அடைந்தார் என்ற செய்தி அறிந்து வருத்தம் அடைந்தேன்.

தான் பிறந்தபோதே அன்புத் தாயாரை பறிகொடுத்த துயரத்திற்கு உரியவர் மு.க. முத்து. கலைத்துறையில் நாட்டம் கொண்ட அவர் தொடக்க காலத்தில் தி.மு. கழக மேடைகளில் கழக கொள்கை விளக்கப் பாடல்களை பாடியும், தேர்தல் களத்தில் சிறப்பாக பிரச்சாரம் செய்தும் தி.மு.கழக வளர்ச்சிக்கு பெரிதும் துணை நின்றார். சிறந்த திரைப்பட நடிகராகவும், பாடகராகவும் கலைத்துறையில் முத்திரை பதித்து வந்தார்.

இவரது மறைவால் துயரம் அடைந்திருக்கக் கூடிய தி.மு.கழகத் தலைவரும், தமிழ்நாடு முதல்வருமான தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும், மு.க.முத்து அவர்களின் துணைவியார் சிவகாமசுந்தரி, மகன் அறிவுநிதி, மகள் தேன்மொழி ஆகியோருக்கும், மற்றும் உள்ள குடும்ப உறவுகளுக்கும் என் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## ‘அவரும் நானும்’ நூல் வெளியீட்டு விழா ஒத்திவைப்பு!

### ‘உயிர்மை’ பதிப்பகம் அறிவிப்பு!

சென்னை, ஜூலை 20 -

சென்னை - உயிர்மை பதிப்பகம் நேற்று வெளியிட்ட அறிவிப்பு வருமாறு :-

முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் மூத்த மகன் மு.க.முத்து அவர்கள் இன்று (19.07.2025) காலை, உடல் நலக் குறைவால் மறைவு எய்தியதையொட்டி, நேற்று (19.07.2025) மாலை, சென்னை கோட்டூர்புரம், அண்ணா நூற்றாண்டு நூலகக் கலையரங்கத்தில், உயிர்மை பதிப்பகம் சார்பாக நடைபெற இருந்த திருமதி. துர்கா ஸ்டாலின் அவர்களின், “அவரும் நானும் பாகம் 2” நூல் வெளியீட்டு விழா ஒத்திவைக்கப்படுகின்றது.

மு.க.முத்து அவர்களின் குடும்பத்தினருக்கு, உயிர்மை பதிப்பகத்தின் சார்பாக ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இவ்வாறு அச்செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.